# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12,796—1961 දෙසැම්බර් 7 වැනි බ්‍රහස්පතින්ද—7.12.61

12,796 ம் இலக்கம் — 1961 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 7 ந். திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I) — பொது

### விலைக் கட்டளைகள்

விலைக்கட்டளை இலக்கம் : எப். சீ/வீ. எஸ். எப். 9 (3).　　　　சுத்தமாக்கப்பட்ட வெள்ளைச்சீனி

**1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்**

**கட்டளை**

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினாலும் 3 (2) ம் பிரிவினாலும் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிக்கு (உணவு) அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு கொழும்பு மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு), சத்தரசிங்ஹகே டொன் சுகததாச ஆகிய நான் இக்கட்டளையால்.—

(i) 1961 ம் ஆண்டு ஜூலை மாதம் 29 ம் திகதி எப். சீ/வீ. எஸ். எப். 9 (2) என இலக்கமிடப்பட்ட 12,568 இலக்கம் கொண்ட 1961 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ம் திகதி வெளிவந்த இலங்கை அரசாங்க அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விலைக்கட்டளையை உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

(ii) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளை முறையே சுத்தமாக்கப்பட்ட வெள்ளைச்சீனி ஒரு அந்தருக்கு ஆகக்கூடிய மொத்த விலையாகவும், ஒரு நிகர இருத்தலுக்குரிய ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். அட்டவணையின் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள இடங்களில் இந்த விலைகளுக்கு மேல் விற்கப்படாது.

(iii) இக்கட்டளையின் நோக்கத்துக்காக.—

(அ) எத்தொகையான சீனியை ஒரு மொத்த அந்தர் தொகையில் அல்லது அதற்குக்கூடிய தொகையில் திருப்பி விற்பதற்காக ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் ;

(ஆ) ஒரு மொத்த அந்தருக்கு குறைந்த எத்தொகையான சீனியை பாவிப்பிற்கு அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும் ;

(இ) எவ்விதமான கருப்பட்டியும் சீனியுடன் சேர்க்கப்படாது.

(iv) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் எவராவது சீனியை வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது.

(v) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது சீனி வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைச் சீனி வைத்திருக்கும் இடத்தில் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

(vi) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் மொத்தமாக அல்லது சில்லறையாக சீனி விற்கும் ஒவ்வொருவரும், சீனி வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டும் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற சீனிக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

1961 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4 ம் திகதி கொழும்புக் கச்சேரியில் முற்பகல் 9 மணிக்குக் கையொப்பமிடப்பட்டது.

எஸ். டி. சுகததாச,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு)
கொழும்பு மாவட்டம்

அட்டவணை

சுத்தமாக்கப்பட்ட வெள்ளைச்சீனி

| பத்தி 1 எல்லைகள் | பத்தி 2 மொத்த அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை ரூ. ச. | பத்தி 3 நிகர இறுத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலை ரூ. ச. |
|---|---|---|
| 1. ஹாப்பிற்றிகம் கோறளை | 66 97 | 0 62 |
| 2. அளுக்குறு கோறளை வடக்கு " அ " | | |
| (அ) நீர்கொழும்பு | 65 98 | 0 62 |
| (ஆ) கொச்சிக்கடை | 66 50 | 0 62 |
| 3. அளுத்குறு கோறளை தெற்கு | 65 98 | 0 62 |
| 4. அளுத்குறு கோறளை வடக்கு " ஆ " | | |
| (அ) மினுவங்கொடை | 66 50 | 0 62 |
| (ஆ) டிவுல்லபிட்டிய | 66 47 | 0 62 |
| 5. சியான்னே கோறளை மேற்கு (மெதபற்று) | 66 76 | 0 62 |
| 6. சியான்னே கோறளை மேற்கு (அதிகாரி பற்று) | | |
| (அ) மஹர பொல்லேகல | 65 90 | 0 62 |
| (ஆ) உடுப்பில்ல | 66 0 | 0 62 |
| 7. சியான்னே கோறளை கிழக்கு | | |
| (அ) நிட்டம்புவ | 68 48 | 0 62 |
| (ஆ) தொம்பே, பூகொட | 67 2 | 0 62 |
| 8. ஹேவாகம் கோறளை : | | |
| (அ) கடுவெல, ஹோமாகம | 66 70 | 0 62 |
| (ஆ) பாதுக்கை | 66 88 | 0 62 |
| (இ) ஹன்வெல்ல | 66 80 | 0 62 |
| (ஈ) வக, அவிஸ்சாவெல்ல | 66 92 | 0 62 |
| 9. சல்பிற்றி கோறளை | 66 50 | 0 62 |
| 10. கொழும்பு மாநகர் தவிர்ந்த (கொழும்பு காரியாதிகாரியின் பிரிவு) | 66 65 | 0 62 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும் இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்றலாகாது.

12-601.

---

உபஉணவுப் பொருட்கள்
(மாசிக்கருவாடு அல்லது பொனிட்டோ கருவாடு)

விலைக்கட்டளை இலக்கம் : எப். சீ/வீ. எஸ். எப் 1 (39).

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினாலும் 3 (2) ம் பிரிவினாலும் கொழும்புப் பிரிவு உதவி விலைக்கட்டுப் பாட்டதிகாரிக்கு (உணவு) அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு சத்தரசிங்ஹகே டொன் சுகத்ததாச ஆகிய நான் இக்கட்டளையால் :—

(i) 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி கொழும்பு மாநகர எல்லைக்குள் விலைக்கட்டளைகளின்படி மாசிக்கருவாடு அல்லது பொனிட்டோ கருவாடு மொத்த அந்தர் ஒன்றுக்கு இதனோடிருக்கும் அட்டவணையின் 3 ம் பத்தியில் குறிக்கப்பட்ட விலைகளை சேர்த்துக் கணிக்க வேண்டிய மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விலையாக அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட மாசிக்கருவாடுக்கு அல்லது பொனிட்டோ கருவாடுக்கு அட்டவணையின் 2 ம் பத்தியில் குறிக்கப்பட்ட எல்லைகளுக்குள் விற்கப்பட வேண்டிய விலைகளாக உடனடியே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட மாசிக்கருவாட்டையோ அல்லது பொனிட்டோ கருவாட்டையோ அட்டவணையின் 2 ம் பத்தியில் குறிக்கப்பட்ட எல்லைகளுக்குள் குறிப்பிட்ட விலைகளுக்கு மேலாக விற்றலாகாது.

(ii) 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி கொழும்பு மாநகர எல்லைக்குள் விலைக்கட்டளைகளின்படி மாசிக்கருவாடு அல்லது பொனிட்டோ கருவாடு நிகர இறுத்தல் ஒன்றுக்கு இதனோடிருக்கும் அட்டவணையின் 4 ம் பத்தியில் குறிக்கப்பட்ட விலைகளை சேர்த்துக் கணிக்க வேண்டிய சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலையாக அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட மாசிக் கருவாட்டுக்கு அல்லது பொனிட்டோ கருவாட்டுக்கு அட்டவனையின் 2 ம் பத்தியில் குறிக்கப் பட்ட எல்லைகளுக்குள் விற்கப்படவேண்டிய விலைகளாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட மாசிக்கருவாட்டையோ அல்லது பொனிட்டோ கருவாட்டையோ அட்டவணையின் 2 ம் பத்தியில் குறிக்கப்பட்ட எல்லைகளுக்குள் குறிப்பிட்ட விலைகளுக்கு மேலாக விற்றலாகாது.

(iii) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) இதனோடிருக்கும் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எத்தொகையான மாசிக்கருவாடோ அல்லது பொனிட்டோ கருவாடோ திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு மொத்த அந்தருக்கு அல்லது அதற்குக் கூடிய எத்தொகையையாவது ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும்.

(ஆ) இதனோடிருக்கும் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எத்தொகையான மாசிக்கருவாடோ அல்லது பொனிட்டோ கருவாடோ திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு மொத்த அந்தருக்கு குறைந்த எத்தொகையாவது பாவிப்பிற்கு அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும்.

(iv) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள மாசிக் கருவாட்டையோ அல்லது பொனிட்டோ கருவாட்டையோ வேறேரு பொருளோடு கலந்து எவராவது விற்றலாகாது என ஆணை யிடுகிறேன்.

(v) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள மாசிக்கருவாட்டையோ அல்லது பொனிட்டோ கருவாட்டையோ தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் சிறு தொகையான மாசிக்கருவாட்டையும் பொனிட்டோ கருவாட்டையும் இக்கட்டளையால் மாசிக்கருவாட்டுக்கும் பொனுட்டோ கருவாட்டுக்கும் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள் ஒரு அங்குலத்துக்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி மாசிக்கருவாட்டையும் அல்லது பொனிட்டோ கருவாட்டையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்ருகப் பார்க்கக் கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்கப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(vi) இக்கட்டளையின் நோக்கத்திற்காக “ இருத்தல் ” அல்லது “ இரு ” என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படும் என்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(vii) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட மாசிக்கருவாட்டையோ அல்லது பொனிட்டோ கருவாட்டையோ மொத்தமாக அல்லது சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்கு பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்ற மாசிக்கருவாடு அல்லது பொனிட்டோ கருவாட்டின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைக்கு கொடுத்த விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(viii) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட மாசிக்கருவாட்டையோ அல்லது பொனிட்டோ கருவாட்டையோ விற்குமிடத்து அட்டவணையின் 3 ம், 4 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் மாசிக்கருவாட்டையோ அல்லது பொனிட்டோ கருவாட்டையோ சுற்றிக்கொடுக்கும் உறை ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1961 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2 ம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

எஸ். டி. சுகததாச,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
கொழும்பு மாவட்டம்.

அட்டவணை

| 1 ம் பத்தி விபரம் | | 2 ம் பத்தி எல்லை | 3 ம் பத்தி கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் மொத்த வியாபாரியின் ஆகக் கூடிய மொத்த விலையுடன் மொத்த அந்தர் ஒன்றுக்கு சேர்த்துக் கணிக்கப்பட வேண்டிய விலைகள் ரூ. ச. | 4 ம் பத்தி கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் நிகர இருத்தல் ஒன்றுக்கு விதிக்கப்பட்ட சில்லறை விலையுடன் சேர்த்துக் கணிக்கப்பட வேண்டிய விலைகள் ரூ. ச. |
|---|---|---|---|---|
| மாசிக்கருவாடு அல்லது பொனிட்டோ மீன் | 1. | ஹாபிட்டிகம் கோறளை | 4 0 | 0 4 |
| | 2. | அலுத்குறு கோறளை வடக்கு “ அ ” | 3 76 | 0 4 |
| | 3. | அலுத்குறு கோறளை வடக்கு “ ஆ ” | 3 78 | 0 4 |
| | 4. | அலுத்குறு கோறளை தெற்கு | 3 50 | 0 4 |
| | 5. | சியன்ன கோறளை கிழக்கு | 3 80 | 0 4 |
| | 6. | சியன்ன கோறளை மேற்கு (அதிகாரி பற்று) | 3 48 | 0 4 |
| | 7. | சியன்ன கோறளை மேற்கு (மெத பற்று) | 3 64 | 0 4 |
| | 8. | ஹேவாகம் கோறளை | 3 62 | 0 4 |
| | 9. | சல்பிற்றிக் கோறளை | 3 54 | 0 4 |
| | 10. | கொழும்பு மாநகர எல்லைகள் தவிர்ந்த கொழும்புப் பிரிவு காரியாதிகாரியின் பகுதி | 3 44 | 0 4 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

12–599.

---

உணவு விலைக் கட்டளை இல. எம்.என்/11—1961. **வெள்ளைச் சீனி**

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவோடு 3 (2) ம் பிரிவால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, மன்னர் மாவட்டத்தின் உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), சண்முகம் பரமநாதன் ஆகிய யான் இக்கட்டளையால்—

(அ) 2.8.61 ல் வெளிவந்த 12,568 ம் இலக்க அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 28.7.61 ம் திகதியிட்டுப் பிரசுரமான சீனியின் விலையைக் குறிக்கும் எம்என்/9—1961 இலக்க உணவுவிலைக் கட்டளையை உடனடியாக எடுத்துவிடுகிறேன் ;

(ஆ) இதன்கீழ்த் தரப்படும் 1 ம் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளை முறையே வெள்ளைச் சீனியையும் கறுப்புச் சீனியையும் மொத்த வியாபாரி ஒருவர் சில்லறை வியாபாரி ஒருவருக்கு விற்கும் மொத்த அந்தரொன்றின் ஆகக்கூடிய மொத்த விலையாக இன்று காலை 9 மணியிலிருந்து (4.12.61) நடை முறையில் வருமாறு விதிக்கிறேன், இவ்விலைக்குக் கூடுதலாக குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் தரப்பட்டுள்ள எல்லைகளுக்குள் விற்கலாகாது ;

(இ) இதன்கீழ்த் தரப்படும் 2 ம் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளை முறையே வெள்ளைச் சீனியையும் கறுப்புச் சீனியையும் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாக இன்று காலை 9 மணியிலிருந்து நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன், இவ்விலைக்குக் கூடுதலாக குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் தரப்பட்டுள்ள எல்லைகளுக்குள் விற்கலாகாது ;

(ஈ) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) எந்தவகைச் சீனியும் ஒரே நேரத்தில் திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது எந்த வகைச் சீனியும் ஒரே நேரத்தில் ஒரு மொத்த அந்தர்த் தொகையில் அல்லது அதற்குக் கூடுதலாக விற்றல் மொத்த விற்பனையாகக் கருதப்படுமென்றும் ;

(ஆ) எந்த வகைச் சீனியையும் ஒரே நேரத்தில் ஒரு மொத்த அந்தருக்குக் குறைவாகப் பாவனைக்காகவோ, உட்கொள்ளுவதற்காகவோ விற்றல் சில்லறை விற்பனையாகக் கருதப்படுமென்றும் ;

(இ) " சீனி " என்பது எவ்வித சர்க்கரையும் தவிர்ந்ததாக இருத்தல்வேண்டுமெனவும் ஆஞ்ஞையிடுகிறேன்;

(உ) இக்கட்டளையால் ஆககூடிய விலைகளை நிர்ணயிக்கும் பகுதிகளில் சீனியைத் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில், எவ்விடத்திலாவது அல்லது எவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்திலுள்ள சீனியின் தொகை, இக்கட்டளையால் நிர்ணயிக்கப்பட்ட ஆககூடிய விலைகள், ஒரு அங்குலத்திற்குக் குறையாத உயரத்தைக் கொண்ட எண்களில் விலைக்குறிப்பு அட்டைகளில் அல்லது விளம்பரப் பலகையிற் பொருத்தப் பெற்று பாவனையாளருக்குச் சீனியும் ஆககூடிய விலைகளும் நன்றாகத்தெரியக்கூடியதாக அக்கொள்கலத்துடன் இணைத்துப் பகிரங்க பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(ஊ) இக்கட்டளையால் ஆககூடிய விலைகளை நிர்ணயிக்கும் பகுதிகளில் சீனியை வேறெவ்விதப் பொருட்களுடனும் கலந்து விற்கலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(எ) இக்கட்டளையின் நோக்கத்திற்காக, " இருத்தல் " அல்லது " இரு " என்பது " அவோர்டுபோஸ் " எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(ஏ) இக்கட்டளையால் ஆககூடிய விலைகளை நிர்ணயிக்கும் பகுதிகளில் சீனியை மொத்தவிலையாகவோ அல்லது சில்லறை விலையாகவோ விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு அன்னாருக்குப் பற்றுச் சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் —

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்ற சீனியின் தொகை " (நிறையில்) ;
(இ) விற்ற சீனியின் வகை அதாவது வெள்ளைச் சீனியா கறுப்புச் சீனியா என்பது
(ஈ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;
(உ) எவ்விதமான விற்பனை அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது

(ஐ) எவ்வகைச் சீனியையும் விற்குமிடத்து 1 ம், 2 ம் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் குறிப்பிட்டுள்ள ஆககூடிய விலைகளில் அதனைக் கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1961 ம் ஆண்டு மார்கழி மாதம் 4 ம் திகதி 9 மணிக்கு மன்னாரில் கையொப்பமிடப்பட்டது.

ச. பரமநாதன்,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மன்னார் மாவட்டம்.

## முதலாம் அட்டவணை

| பத்தி 1 பகுதி | பத்தி 2 வெள்ளைச் சீனி (மொத் வியாபாரியின் மொத்த அந்தரொன்றின் ஆககூடிய மொத்த விலை) ரூ. ச. | பத்தி 3 கறுப்புச் சீனி ரூ. ச. |
|---|---|---|
| மன்னார் பட்டினச் சபைப் பகுதி | 69 27 | 61 50 |
| நானாட்டான் கிழக்கு கிராமச் சங்கப் பகுதி | 69 12 | 61 35 |
| முசலி தெற்கு | 69 27 | 61 50 |

## இரண்டாம் அட்டவணை

| பத்தி 1 பகுதி | பத்தி 2 வெள்ளைச் சீனி (சில்லறை வியாபாரியின் நிகர இருத்தலொன்றின் ஆககூடிய சில்லறை விலை) சதம் | பத்தி 3 கறுப்புச் சீனி சதம் |
|---|---|---|
| மன்னார் பட்டின சபைப் பகுதி | 65 | 58 |
| கிராமச் சங்கங்களுக்குட்பட்ட பகுதிகள்.— | | |
| மன்னார் கிழக்கு | 65 | 58 |
| எருக்கலம்பிட்டி | 65 | 58 |
| மன்னார் மேற்கு (தலைமன்னார் கி. வி. பகுதியை தவிர) | 65 | 58 |
| வங்காலை | 65 | 58 |
| மாந்தை தெற்கு | 65 | 58 |
| மாந்தை வடக்கு | 66 | 59 |
| பெருங்களிப்பத்து (பெரியமடு கொலனியைத் தவிர) | 66 | 59 |
| மன்னார் மேற்கு | 66 | 59 |
| பெருங்களிப்பத்து (பெரியமடு கொலனி) | 67 | 60 |
| இலுப்பைக்கடவை | 66 | 59 |
| நானாட்டான் கிழக்கு | 65 | 58 |
| நானாட்டான் மேற்கு | 65 | 58 |
| முசலி தெற்கு (மறிச்சுக்கட்டி கி. வி. பகுதியை தவிர) | 66 | 59 |
| முசலி வடக்கு | 66 | 59 |
| பனங்காமமும் முசலி தெற்கும் (மறிச்சுக்கட்டி கி. வி. பகுதி) | 67 | 60 |
| மேற்கு மூலை | 67 | 60 |

குறிப்பு.—மேலே சொல்லப்பட்ட விலைகள் சீனியை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல. இவை **ஆககூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்குக் கூடுதலாக சீனியை எவரும் விற்றலாகாது.

12-591.

உணவு விலைக் கட்டளை இல. வி. 73

உப உணவுப் பொருட்கள்
வெள்ளைச்சீனி

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவோடு 3 (2) ம் உட்பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு வவுனியா மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) பரமநாதன் செல்வரத்தினமாகிய நான் இக்கட்டளையால்.—

(1) 1961 ம் ஆண்டு ஆவணி மாதம் 1 ம் திகதியைக் கொண்ட 12,567 ம் இலக்க இலங்கை அரசாங்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1961 ம் ஆண்டு ஆடி மாதம் 28 ம் தேதி வெளியான வி. 71 ம் இலக்க விலைக்கட்டளையை இத்திகதியிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம் 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளை முறையே மொத்த அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்தவிலையாகவும் நிகர இறுத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக.—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தரைக்கொண்ட தொகையில் அல்லது அதிற் கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்றும்,

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும் என்றும், ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடாப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றல் ஆகாது, என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடாப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளேனும் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறு தொகையையும், இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள் ஒரு அங்குல உயரத்துக்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி, அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்குகப் பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இறுத்தல் " அல்லது " இறு " என்பது அவோர்டுபோஸ் எடுத்தல் அளவை முறையின் பிரமாண இறுத்தல் நிறையாகக் கருதப்படும் என்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடாப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விதிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும், அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அவருக்கு பின் வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி.

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்).

(இ) விற்ற தொகைகளுக்குக் கொடுக்கப்பட்ட விலை.

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(8) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து அட்டவணையின் 2 ம் 3 ம் பத்திகளிற் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில், அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கப்படும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1961 ம் ஆண்டு மார்கழி மாதம் 4 ம் திகதி மாலை 2 மணிக்கு வவுனியாக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ப. செல்வரத்தினம்,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு)

### அட்டவணை

| பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>நிகர றுத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| வெள்ளைச்சீனி .. .. | 68 53 | 0 65 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல. இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்றலாகாது.

12-589.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது